# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, ஜப்பான்-ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2006 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க ஜப்பான்- ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

*[2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.ஒ.கூ. 11/2003*

**ஜப்பான் – ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

"ஜப்பான் – ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கம்" என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும், சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புடைய கருமங்களையும் பயனுற கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இற்றைவரை இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்ததாலும் :

அது, கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதனால் அவ்விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, ஜப்பான் – ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஜப்பான் – ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஜப்பான் – ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கத்தில் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் "ஜப்பான் – ஸ்ரீலங்கா கல்வி மற்றும் கலாசார சங்கம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தபடுகின்றது :—

(அ) வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கான பாடநெறி களை நடாத்துதலும் அத்தகைய கற்கைகளில் உயர் கல்வி மற்றும் டிப்புளோமா பாடநெறிகளை வழங்குத லும் ;

(ஆ) வெளிநாட்டவர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் கற்பிப்பதற்கான பாடநெறிகளை நடத்துதல்;

(இ) நடாத்தப்படும் பாடநெறிகளை வெற்றிகரமாகப் பயின்று பூர்த்திசெய்யும் மாணவர்களுக்காக தேர்ச்சி சான்றிதழ்களை வழங்குதல் ;

(ஈ) இயைபான பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களை அந்தந்த பாடநெறிகளில் நடத்தப்படுகின்ற பரீட்சைக ளுக்குத் தயார் செய்தல் ;

(உ) பாடநெறிகள் அனைத்தையும் தகைமையும் தேர்ச்சியும் பெற்ற ஆசியரியர் குழுவின் மேற்பார்வையில் நடத்து தலும் மொழிப் பாடநெறிகள் அனைத்தினதும் பாட விதானங்களை 1985 இன் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் மூலமாகத் தயாரித்தலும் ;

(ஊ) தொழிற்பயிற்சி, கல்வி மற்றும் சமூகசேவைகள் என்னும் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் களின் அந்தந்த அமைச்சுகளின் அங்கீகாரத்துடன் கற்றலுக்கான விசேட ஆற்றலுடைய மாணவர்களைத் தெரிவு செய்தல் ;

(எ) நூல்நிலையங்களை நிறுவிப் பேணிவருதல், நூல்கள், சஞ்சிகைகள், நினைவு மஞ்சரிகள், பருவகால சஞ்சிகை களுக்கு ஒப்பப்பணம் செலுத்துதலும் அவற்றை விநியோகித்தலும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை ஈடேற்றிக் கொள்வதற்கு உகந்ததெனக் கருதப் படக்கூடிய பிற சேவைகளை நல்குதல் ;

(ஏ) விரிவுரைகள், மாநாடுகள், தத்துவக் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், குழு ஆய்வுகள், பொழுது போக்கு நடவடிக்கைகள் கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் அத்தகைய வேறு நடவடிக்கைகளை ஊக்குவித்தல் அனுசரணை வழங்குதல் மற்றும் நடாத்துதல் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுடன் ஒத்துவரக் கூடிய குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு சங்கங்கள், மன்றங்கள் அல்லது தாபனங்களுடன் ஒத்துழைத்து இணக்கத்துடன் செயலாற்றுதல் ; அத்துடன்

(ஒ) மொழிக் கற்கையில் ஈடுபட்டுள்ள ஏதேனும் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனத்தின் இணை நிறுவனமாகவோ தாபனமொன்றின் முகவராகவோ செயலாற்றுதலும் வெளிநாடுகளுடன் கலாசாரப் பரிமாறலுக்கான நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருதலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகத் தேவைப்படும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும் மற்றும் தேவைப்படுகின்றவாறான அலுவலர்களையும் சேவையாளர்களையும் சேவையிலீடுபடுத்துதல், சேவைக்கமர்த்துதல், வேலை நீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களையும் உள்ளடக்கியதாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களில் ஏதேனுமொன்றை அல்லது பலவற்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் போசகர், தவிசாளர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படவேண்டிய பத்துப்பேருக்குக் குறையாத

எண்ணிக்கையுடைய உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால், இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைவாக நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கொண்டுள்ள ஏதேனும் முரண் எது எப்படியிருப்பினும் திரு. தக்ஷி தொஷித்த மற்றும் திரு. மசனொறி தொயொத ஆகியோர் கூட்டுத்தாபத்தின் ஆயுட் கால போசகர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களைப் பின்னுறுபவர்கள் போசகர்களாக இருப்பதற்கு அவர்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டும். அவர்களை அடுத்துறுகின்ற ஆட்களும் ஆயுட்கால போசகர்களாக இருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது தவிசாளர் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முன்னரான தேதியன்று பதவி வகிக்கும் சங்கத்தின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்கான கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**6.** (1) காலத்திற்குக் காலம் கூட்டப்படும் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்கின் மூலமும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றிற்குமாக அல்லது எவற்றிற்குமாகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் —

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைச் சேர்த்தல், பதவியிலிருந்து நீங்கல் மற்றும் பதவியிலிருந்து அகற்றுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் பதவி தாங்குநர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) கூட்டங்களை நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களை நியமித்தலும், நீக்குதலும் அவர்களின் தொழில் நியதிகளும், அவர்களின் கடமைகளும் பணிகளும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களினால் அவதானிக்கப்பட வேண்டி நடத்தைக் கோவை ;

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தப்பெறுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகள், ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்படக்கூடியவாறான ஒரு விதி அதேபோன்ற முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

*சங்கத்தினால் அல்லது சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான கடன்கள்.*

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்குச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**8.** கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் மற்றும் செயலாளர் முன்னிலையில் அன்றி கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எந்தவொரு சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன், தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அவர்கள் சாதனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனி வேறானதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கொடை, இறுதிவிருப்பாவனக் கையளிப்புகள், கைமாற்றங்கள், நன்கொடைகள், உதவுதொகைகள் கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனம் தீர்மானிக்க வேண்டியதான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தினால் வரவிற்கு வைப்புச் செய்யப்பட வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மறுசீரமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது சீராக்குவதற்குமாக கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் செயற்படுத்துவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் கூறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்.*

**10.** (1) பணிப்பாளர் சபையானது கூட்டுத்தாபனத்தின் எல்லா வருமானங்களையும் செலவினங்களையும் பற்றித் தகுந்த கணக்குகள் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் குறைந்தது ஒவ்வொரு வருடத்தின் ஒருமுறையாவது பரிசோதிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினராகவுள்ள தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தல்.*

**11.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, ஒப்பப் பணம், கொடை, மானியக்கொடை, இறுவிருப்பாவணக் கையளிப்பு ஆகிவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகவரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமானதாகவும் ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனங்கள் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையாக கையாளவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**12.** இச்சட்டத்தின் அடங்கியுள்ள குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்திலுள்ள சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*